# ஜோலார்பேட்டை நகராட்சி
## சாதாரண கூட்டம்

2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30.12.2020ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

தனி அலுவலர்

**பொருள் எண்.1**

ஜோலார்பேட்டை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஜோலார்பேட்டை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary Stoarge) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் (Transportation) செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஜோலார்பேட்டை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உதவி மொழி சான்றிதழ் (Self Declaration) அனுமதித்து நகரமன்ற தீர்மானம் எண்.130 நாள்.30.11.2020ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட பொது மக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் ஆணையாளர், ஜோலார்பேட்டை அவர்களுக்கு எழுத்து மூலமாக 15 தினங்களுக்கு தெரிவிக்க கோரி அறிவிப்பு மாவட்ட அளவில் முன்னனி நாளிதழ்ளான தினதந்தி நாளிதழில் 10.11.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி அறிவிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கான தோராய செலவினத் தொகை கீழ்கண்டுள்ள நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் | தொகை |
|---|---|---|
| 1 | தினதந்தி | ரூ.2604 |

(ரூபாய் இரண்டாயிரத்து ஆறுநூற்று நான்கு மட்டும்)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.293/2015/எப்1

**பொருள் எண்.2**

ஜோலார்பேட்டை நகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்டுள்ள வாகனத்தின் காப்பீடு 20.12.2020 அன்றுடன் நிறைவடைவதால், 2020-2021ம் ஆண்டிற்கு UNITED INDIA INSURANCE COMPANY Ltd., என்ற நிறுவனம் மூலம் புதுபிக்க வேண்டியுள்ளதால் காப்பீட்டிற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.18,496/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகனத்தின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TATA ACE - TN-23/BL5248 | 18,496/- |

(ரூபாய் பதினெட்டாயிரத்து நாநூற்று தொன்னுற்று ஆறு மட்டும்)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.650/2016/எச்1

**பொருள் எண்.3**

ஜோலார்பேட்டை நகராட்சி, பயன்படுத்தப்பட்டு வரும் ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண்.TN23BP2497 வாகனத்தின் காப்பீடு 20.12.2020 அன்றுடன் நிறைவடைகிறது. எனவே, ஏற்கெனவே0 காப்பீடு செய்யப்பட்டு M/S.UNITED INDIA INSURANCE COMPANY Ltd., என்ற நிறுவனம் மூலம் 2020-2021ம் ஆண்டிற்கு காப்பீடு புதுபிக்க ஆகும் செலவினத் தொகை ரூ.12,325/-க்கு செலுத்த அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.46/2016/இ1

**பொருள் எண்.4**

ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் DBC பணியாளர்களை கொண்டு தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் தற்போது டெங்கு நோய் பரவாத வண்ணம் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு காய்ச்சல் இல்லாதவாறு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நகாட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தொடர்ந்து கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளின்போது கொசு ஒழிப்பு அத்தியவசிய தளவாட பொருட்கள் குறைவாக உள்ளது. எனவே, கீழ்கண்ட விவரப்படி பொருட்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | அளவு |
|---|---|---|
| 1 | பைரோத்திரம் (Pyrethrum) | 200 லிட்டர் |

**அலுவலக குறிப்பு :-**

பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி பொது நிதியிலிருயிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.277/2020/எச்1

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கானொலி ஆய்வு கூட்டங்களில் வழங்கிய அறிவுரையின்படி ஜோலார்பேட்டை நகராட்சி, பொட்டிகான்பள்ளத்தில் நகராட்சிக்கு சொந்தமான நுன்னுயிர் உறம் தயாரிக்கும் மையத்தில் தயாரிக்கப்படும் உறத்தை விவசாய ஆராய்சி செய்வதற்காக கோயம்பத்தூரில் உள்ள ENVIRO FARMERS LABS & TECHNOLOGIES என்ற ஆராய்சி நிறுவனத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்து அதனுடைய தரத்தினை சான்று பெற தெரிவித்துள்ளார். எனவே, இந்நகராட்சியில் தயாரிக்கும் உறத்தை மேற்படி நிறுவனத்திற்கு அனுப்பி ஆராய்சி முடிந்து சான்று பெறப்பட்டுள்ளது, மேற்படி நிறுவனத்தில் உறத்தினை ஆராய்சி செய்து முடித்ததற்கான செலவினத் தொகை ரூ.2950/- (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 293/2015/எச்1

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் கீழ்கண்ட குத்தகை இனங்களில் வ.எண்.1 முதல் 3 வரையிலான குத்தகை இனங்களுக்கு மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2021 உடன் முடிவடைவதால், 01.04.2021 முதல் 31.03.2024 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு சுங்கம் வசூலிக்கவும் உரிமைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை | சொத்து மதிப்பு சான்று 01.01.2021க்கு பிறகு பெறப்பட்டது ரூ. | சொத்துமதிப்பு சான்றிதழுடன் கட்ட வேண்டிய டேவணித் தொகை வங்கி வரைவோலை ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர் கட்ட வேண்டிய டேவணித் தொகை வங்கி வரைவோலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சி பிரதி புதன்கிழமை கூடும் வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்துகொள்ளும் உரிமை | 5,00,000/- | 1,00,000/- | 2,00,000/- |
| 2 | ஜோலார்பேட்டை நகராட்சியின் எல்லைக்குள் சாலை ஓரங்களில் உள்ள தினசரி தற்காலிக கடைகளுக்கு பிரதி தினமும் சுங்கம் வசூலித்துகொள்ளும் உரிமை | 1,00,000/- | 25,000/- | 50,000/- |
| 3 | ஆடு அடிக்கும் இடங்களில் சுங்கம் வசூல் செய்துகொள்ளும் உரிமை | 50,000/- | 5,000/- | 10,000/- |

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தனித்தனியே வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோரவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், தேவைப்படும் ஏல அறிவிப்புகளை அச்சடித்துக்கொள்வதற்கான, செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1099/2020/அ1

**பொருள் எண்.7**

ஜோலார்பேட்டை நகராட்சியில் ODF+ தரச்சான்று பெற வேண்டியுள்ளால் வருவாய் நிதி **2020–2021**ன் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **15.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.10காந்தி ரோடு,வார்டு 13 நல்லான் தெரு,வார்டு17 சந்திரன் பள்ளம்,வார்டு 5 ஊசிநாட்டான் வட்டம்,வார்டு 4 கேசவரெட்டி தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கழிவறைகளை பராமரிப்பு பணிகள் செய்தல். | **6.50** | திரு.S.B.குமரவேல் ஒப்பந்ததாரர், 0.10% மதிப்பீட்டை விட குறைவு. |
| | | | M/s. NNN கன்ஸ்ட்ரக்சன், 0.20% மதிப்பீட்டை விட அதிகம். |

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சிக்கு ODF+ சான்று பெற வேண்டியுள்ளதால் இப்பணிக்குண்டான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ளு.க்ஷ.குமரவேல் ஜோலார்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலாம்.

ந.க.எண்: இ1./1039/2020

**பொருள் எண்.8**

ஜோலார்பேட்டை நகராட்சியில் வருவாய் நிதி **2020–2021**ன் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **15.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சியில் குடிநீர் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் டிசம்பர் 2020 முதல் நவம்பர் 2021 வரை ஆட்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல். | **15.00** | திரு.S.B.குமரவேல் ஒப்பந்ததாரர். மதிப்பீட்டின் விலை விகிதத்தில். |
| | | | M/s. AM கன்ஸ்ட்ரக்சன், 0.27% மதிப்பீட்டை விட அதிகம். |

அலுவலக குறிப்பு

1. இப்பணிக்குண்டான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டின் விலை விகிதத்தை வழஙகியுள்ள திரு.S.B.குமரவேல் , ஜோலார்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: இ1./1041/2020

**பொருள் எண்.9**

ஜோலார்பேட்டை நகராட்சியில் வருவாய் நிதி 2020–2021ன் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 15.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.8 முனிசாமி நாயுடு தெருவில் உள்ள பழதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சரிசெய்தல் பணி. | 2.20 | M/s. NNN கன்ஸ்ட்ரக்சன். 0.03% மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | M/s. AM கன்ஸ்ட்ரக்சன், 0.02% மதிப்பீட்டை விட குறைவு. |

அலுவலக குறிப்பு

1. இப்பணிக்குண்டான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள M/s.AM கன்ஸ்ட்ரக்சன், ஜோலார்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலாம்.

ந.க.எண்: இ1./1040/2020

**பொருள் எண்.10**

ஜோலார்பேட்டை நகராட்சியில 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் பெரும்பெருட்டு குடிநீர் நிதி 2020–2021ன் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 15.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.1 புதூர் கிழக்கு தெரு, புதூர் மேற்கு தெரு(வாணியம்பாடி மெயின் ரோடு), வார்டு 2 போயர் காலணி, தாபல்கார அனுமந்த கவுண்டர் தெரு, மேட்டுசக்குப்பம், வார்டு 5 செரங்கன்வட்டம்,வார்டு 6 நேதாஜி ரோடு,வார்டு 7 திருப்பதி சாமி கோயில் தெரு,வார்டு 8 மசுதி பின்தெரு,வார்டு16பாபுநகர், வார்டு17 பார்சம்பேட்டை(இரயில்வேகேட்), ராமரெட்டியூர், வார்டு 18 பார்சம்பேட்டை நியூ காலணி ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குடிநீர் குழாய் இல்லாத இடங்களில் பி.வி.சி பைப்லைன் அமைத்தல் பணி. | 10.00 | M/s. ஸ்ரீ சிவசக்தி அசோசியட்ஸ், 0.27% மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | M/s. NNN கன்ஸ்ட்ரக்சன், 0.17% மதிப்பீட்டை விட குறைவு. |

அலுவலக குறிப்பு

1. இப்பணிக்குண்டான செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள M/s.NNN கன்ஸ்ட்ரக்சன், ஜோலார்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலாம்.

ந.க.எண்: இ1./1038/2020

**பொருள் எண்.11**

ஜோலார்பேட்டை நகராட்சியில் தற்போது வீட்டு உள்பகுதி வரை குடிநீர் இனைப்பு வழங்கும் திட்டதினை அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இனைப்பு வழங்கப்பட்டு வருகிறது அவ்வாறு குடிநிர் இனைப்புகள் வழங்கும் போது சிமெண்ட் சாலை மற்றும் தார்சாலைகள் சேதமடைகிறது எனவே தற்போது மழை காலமாக உள்ளதால் பொதுமக்கள் சாலையில் சென்று வர சிரமாக உள்ளது என பொது மக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.எனவே பொதுமக்களின் நலன் கருதி சேதமடைமந்த சாலைகளை சிமெண்ட் கான்கிரிட் (Cement concrete Path work) மூலம் மேற்கொள்ள 15.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள சேதமடைந்த சாலைகளை சிமெண்ட் கான்கிரிட் (Cement Patch Work)மூலம் சீரமைக்கும் பணி. | 5.00 | M/s. ஸ்ரீ சிவசக்தி அசோசியட்ஸ், 0.04% மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | M/s. N.N.N கன்ஸ்ட்ரக்சன், 0.09% மதிப்பீட்டை விட குறைவு. |

அலுவலக குறிப்பு

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள

M/s. N.N.N கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலாம்.

ந.க.எண்: 877/2020/இ1.

# ஜோலார்பேட்டை நகராட்சி
## சாதாரண கூட்டம்

**2020**ம் ஆண்டு டிசம்பர் மாதம் **30.12.2020**ம் நாள் புதன்கிழமை காலை **11.00** மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரண கூட்ட தீர்மானங்கள்

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 138 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 139 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 140 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 141 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 142 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 143 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 144 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 8 | 8 | 145 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 9 | 9 | 146 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 10 | 10 | 147 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 11 | 11 | 148 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது |

தனி அலுவலர்
ஜோலார்பேட்டை நகராட்சி